**Form.No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

Calender
Miscellaneous — CC.No. 20 of 2022
Priliminary Register
Sessions

Prosecutuion PW1

Depostitions of Prosecution witness for — Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | தேவேந்திரன் |
| Father name | : | திரு.குழந்தைவேல் |
| Village | : | வட்டத்தூர் |
| Taluk | : | |
| Calling | : | PW 1 (LW 1) |
| Religion | : | |
| Age | : | 46 |

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி சோழதரம் காவல் நிலைய பெண் தலைமை காவவர் **WHC-1193** திருமதி ஹேமா என்பரால் அடையாளம் காட்டப்பட்டார்.

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act
(Central Act 44 of 1969) on the 27th day of July 2026

முதல் விசாரணை.

நான் வட்டத்தூரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி கவி கலை எனது மனைவி ஆவார். வசந்தகுமார் என்பவர் எனது அண்ணன் ஆவார். ரகுபதி என்பவர் எனது ஊர்க்காரர் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு காலை நேரத்தில் எனது வீட்டிற்குள் வைத்து எனக்கும் எனது தம்பி திருவரசனுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது.

நாங்கள் இருவரும் அடித்துக் கொண்டோம். எனக்கு மட்டும் லேசான காயம் ஏற்பட்டது. எனது தம்பி தள்ளியதில் சுவற்றில் போய் முட்டிக் கொண்டேன். காவல் நிலையத்தில் சென்று புகார் அளித்தேன். சிதம்பரம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதில் உள்ள விவரம் எனக்கு சரியாக தெரியவில்லை. புகாரில் உள்ள எனது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**(அரசுதரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி கோரப்பட்டது. பரிசீலனை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது. )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை.**

இந்த வழக்கு சம்பந்தமாக நானும் எதிரியும் சமாதானமாகி சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 28.04.2021 அன்று அதிகாலை 03.30 மணியளவில் வீட்டிற்கு வந்த என் தம்பி திருவரசன் என்னையும் எனது மனைவியையும் அசிங்கமாக திட்டி வீட்டினுள் இருந்த இரும்பு பைப்பை எடுத்து என் மூக்கில் குத்தினார் என்றும் மீண்டும் அடிக்க வந்த போது அதை நான் கையால் தடுக்கவே எனது வலது கையின் நடுவிரலில் அடி விழுந்தது என்றும் அதனால் என் மூக்கிலும் கையிலும் ரத்த காயம் ஏற்பட்டு ரத்தம் வழிந்தது என்றும் போலீசார் விசாரிக்க கூறினேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை

சாட்சி விசாரணை முடிந்தது. மறு விசாரணை இல்லை.

**Form.No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

Calender
Miscellaneous CC.No. 20 of 2022
Priliminary Register
Sessions

Prosecutuion PW2
Depostitions of Prosecution witness for Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | வசந்த குமார் |
| Father name | : | திரு.குழந்தைவேல் |
| Village | : | வட்டத்தூர் |
| Taluk | : | |
| Calling | : | PW 2 (LW 3) |
| Religion | : | |
| Age | : | 55 |

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி சோழதரம் காவல் நிலைய பெண் தலைமை காவலர் **WHC-1193** திருமதி ஹேமா என்பரால் அடையாளம் காட்டப்பட்டார்.

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act
(Central Act 44 of 1969) on the 27th day of July 2026

முதல் விசாரணை

நான் வட்டத்தூரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி தேவேந்திரன் எனது தம்பி ஆவார். கவிகலை என்பவர் எனது தம்பி மனைவியாவார். ரகுபதி என்பவரை தெரியாது. ஆஜர் எதிரியை தெரியும். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் நான் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சாட்சியாக என்னை சேர்த்துக்கொள்வதாக கூறினார்.

**(அரசுதரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி கோரப்பட்டது. பரிசீலனை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது. )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை.**

எனது தம்பியும் எதிரியும் சமாதானமாகி விட்டார்கள் என்றாலும் அந்த சமாதான மனுவில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றாலும் சரிதான். 28.04.2021 அன்று அதிகாலை 03.30 மணியளவில் வீட்டிற்கு வந்த எதிரி திருவரசன் தேவேந்திரன் என்பவரையும் அவரது மனைவியையும் அசிங்கமாக திட்டி வீட்டினுள் இருந்த இரும்பு பைப்பை எடுத்து தேவேந்திரன் என்பவரின் மூக்கில் குத்தினார் என்றும் மீண்டும் அடிக்க வந்த போது அதை தேவேந்திரன் கையால் தடுக்கவே அவரது வலது கையின் நடுவிரலில் அடி விழுந்தது என்றும் அதனால் அவரது மூக்கிலும் கையிலும் ரத்த காயம் ஏற்பட்டு ரத்தம் வழிந்தது என்றும் நான் சண்டையை விலக்கி விட்டேன் என்றும் போலீசார் விசாரிக்க கூறினேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி விசாரணை முடிந்தது. மறு விசாரணை இல்லை.